# தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம்

(தமிழ்நாடு நகராட்சிப் பணியாளர்கள் அனைத்துச் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்தது)

பதிவு எண்: 137/2000

மின்னஞ்சல்: tnmea2000@gmail.com வலைதளம்: www.tnmea.in

| தலைவர் | பொதுச்செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| Er.G.சேர்மக்கனி | Er.கோ.இளங்கோவன் | Er.P.விஜய்கார்த்தி |
| மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் | செயற்பொறியாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி | நகராட்சி பொறியாளர், அரியலூர் |
| 9786000296 | 9443749633 | 9965594194 |

துணைத்தலைவர்
Er. B. பட்டுராஜன்
9442191779

துணை பொதுச் செயலாளர்
Er.A.வெங்கடேசன்
9626886423

தலைமையக செயலாளர்
Er.K.வைத்தியலிங்கம்
9789668845

தலைமையிட பொறுப்பாளர்கள்
Er.R.ராமசாமி
கண்காணிப்பு பொறியாளர்
9865140905

Er.G.முருகேசன்
கண்காணிப்பு பொறியாளர்,
ஈரோடு மாநகராட்சி
9443345680

மண்டல தலைவர்கள்
Er.Y.சுரேந்திரன்
Er.ம.முத்து
Er.P.மோகன்
Er.N.பாலசுப்பிரமணியம்
Er.R.பாண்டியராஜ்
Er.P.பிரதான்பாபு
Er.A.B.குமார்


03.11.2025.

பெறுநர் :

நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்கள்,

நகராட்சி நிருவாக இயக்குநரகம்,

MRC நகர், ராஜா அண்ணாமலை புரம்,

சென்னை - 600028.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** நகராட்சி நிருவாகம் - பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கத்தின் மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டல பொறியாளர்களின் சங்க கூட்டம் 02.11.2025 அன்று நடைபெற்றது - தீர்மானங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் - தொடர்பாக.

தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கத்தின் மதுரை மற்றும் திருநெல்வேலி மண்டலத்திற்கான கூட்டம் 02.11.2025 அன்று மதுரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைப்பில் கண்டுள்ளபடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தீர்மானங்களை நிறைவேற்றிட உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இணைப்பு: தீர்மானங்கள் - 6

பொருளாளர் 3/11/25 பொதுச் செயலாளர் 3/11/25 தலைவர் 3/11/25

<u>தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம்</u>

**தீர்மானம் 1:** தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரிந்து வரும் பணி ஆய்வர்கள் பலர் பதவி உயர்வுக்கு தகுதியான நிலையில் இருப்பதனால் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திடமிருந்து பணி மூப்பு பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு அடுத்த பதவி உயர்வு வரைவாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் ஆகும். அரசாணை (நிலை) எண் 10, நாள்: 23.01.2023 படி புதிதாக வரையாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 படி வரைவாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் பதவிகளுக்கு 1:1 என்ற முறையில் பதவி உயர்வும் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. பின்னர் நேரடி பணி நியமனம் மூலம் பணியிடங்களை நிரப்புவதற்கு அழைப்பானை வெளியிடப்பட்டு எழுத்துத் தேர்வு மூலம் வரைவாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.நேரடி நியமனம் மூலம் பணியிடங்களை நிரப்பப்படுவதற்கு முன்பு ஏற்கனவே பணியாற்றி வந்த பணி ஆய்வர்களுக்கு பதவி உயர்வு வழங்கவில்லை மற்றும் பதவி உயர்வுக்கான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படாமல் அனைத்து பணியிடங்களும் நேரடி நியமனங்களுக்கு ஒதுக்கப்பட்டன. இதனால் சுமார் 40-க்கும் குறைவான எண்ணிக்கையில் உள்ள பணி ஆய்வர்கள் பதவி உயர்வு வழங்கப்படாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 இன் படி பணி ஆய்வர்கள் பதவி உயர்வு பெற 3 ஆண்டுகள் பணி ஆய்வர்களாக பணியாற்றி இருக்க வேண்டும். தற்போது உள்ள பணி ஆய்வர்களில் 3 வருடம் பணியாற்றிய 14 பணி ஆய்வர்களுக்கு பதவி உயர்வு வழங்கிடவும் மீதமுள்ள பணி ஆய்வர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதிமுறைகளை தளர்த்தி பதவி உயர்வு வழங்கிடவும் (one time relaxation) ஆவண செய்ய வேண்டும். மேலும் முதல் பணியாளர் கலந்தாய்வு முடிவுற்ற நிலையில் இரண்டாவது பணியாளர் கலந்தாய்வு நடைபெறும் என அறிகிறோம்.நேரடி நியமனத்தின் மறு கலந்தாய்வு நடைபெறுவதற்கு முன்பு பணி ஆய்வர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 2:** தமிழ்நாடு நகராட்சி நிருவாகத்தில் பொறியியல் பிரிவில் பணி ஆய்வர்கள் ஏற்கனவே பணிபுரிந்து வருகின்றனர். மேலும் தற்போது 300 க்கும் மேற்பட்ட பணி ஆய்வர்களுக்கு நேரடி நியமனத்தின் மூலம் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது இவர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ.18,200 - ரூ.67,100 (level 5) என்ற அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனை உயர்த்தி வழங்க வேண்டுமென நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. மாநகராட்சிகளில் இதே நிலையில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடத்திற்கு உண்டான ஊதிய விகிதம் ரூ.35,400 – ரூ.1,30,400 (நிலை 11) என்ற விகிதத்தில் உள்ளது. ஆகவே இதே ஊதிய விகிதத்தினை நகராட்சி பணி ஆய்வர்களுக்கும் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 3:** தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் பொதுப்பணி மேற்பார்வையாளர் / வரைவாளர்களுக்கான பணி மூப்பு பட்டியல் நகராட்சி நிருவாக இயக்குநரகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு உண்டான பதவி உயர்வு இளநிலை பொறியாளர் பணியிடமாகும். தற்போது, இளநிலை பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட்டுள்ள நிலையில், இவர்களுக்குண்டான பதவி உயர்வு பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பலர் 16 முதல் 20 வருடங்களாக பதவி உயர்வு இல்லாமல் உள்ளனர். எனவே இவர்களுக்குண்டான பதவி உயர்வினை ஒரு முறை தளர்வு (One time relaxation) செய்து பதவி உயர்வு வழங்க வேண்டுமாய் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 4:** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் வெளியிடப்பட்ட அரசாணை எண் 45 நாள்: 12.04.2023 - இல் மின்கண்காணிப்பாளர் நிலை – 1க்கு அடுத்தக்கட்ட பதவி உயர்வான உதவி பொறியாளர் பதவிக்கு 20:1 என்ற விகிதத்தில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால், தற்போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 32 நாள்: 04.03.2025 - இல் மேற்கண்ட பதவி உயர்வு சதவிகிதம் விடுபட்டுள்ளது. எனவே, விடுபட்ட பதவி உயர்வு சதவிகிதத்தினை இணைத்து உரிய திருத்தங்கள் செய்து உத்திரவு வழங்க வேண்டுமாய் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம் 5:** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் வெளியிடப்பட்ட அரசாணை எண்: 32. நாள்: 04.03.2025. இந்த அரசாணையில் புதிதாக வெளியிடப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 திருத்தம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டதில் பகுதி 4 சிறப்பு விதிகள் அட்டவணை– 2 பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு தகுதியாக பணி ஆய்வர் பணியிடத்தில் 3 ஆண்டுகள் பணி புரிய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதையடுத்துள்ள வரைவாளர் பணியிடத்திற்கான தகுதியாக பணி ஆய்வராக 5 ஆண்டுகள் பணி புரிந்திருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடமும் வரைவாளர் பணியிடமும் ஒரே நிலை (Equal cadre) பணியிடங்களாகும். எனவே இந்த குறைப்பாட்டினை பணி விதிகளில் உரிய திருத்தங்கள் செய்து உத்திரவு வழங்க வேண்டுமாய் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் 6: தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் பொறியாளர்கள் தினமும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை பணிபுரிகின்றனர். இது அவசர காலத்தில் நேரம், காலம் கருதாது. இரவு பகல் பாராது கடுமையான சூழ்நிலையில் பணிபுரிந்து வருகின்றனர். அரசு விடுமுறை நாளான சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் இது தொடருகின்றது. வார நாட்களில் ஞாயிற்றுக் கிழமை ஒரு தினம் மட்டும் அரசு விடுமுறையை துய்த்துக்கொள்ளவும். அத்தினத்தில் அதே நகராட்சியில் உள்ள பொறியாளர் ஒருவரை சுழற்சி முறையில் பணியினை மேற்கொள்ளவும் உரிய உத்திரவுகள் வழங்க வேண்டுமாய் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் சங்கம், நகராட்சி நிருவாக இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

பொருளாளர் 3/11/25 | பொதுச் செயலாளர் 3/11/25 | தலைவர் 3/11/25